# கதிர்காமம் பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 18 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 16 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, கதிர்காமம் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 2,340,000 பெறுமதியான 04 கடைகளை 2008 பெப்ரவரி 26 திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாக்கியிருந்த போதும் அச் சொத்துக்களை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ரூபா 1,500,000 பெறுமதியான இலக்க 253 – 6345 கொண்ட கப் வண்டி விபத்துக்குள்ளாகியிருந்த காரணத்தினால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் கப் வண்டியை உரித்தாக்கி நட்டஈடாக ரூபா 1,178,625 இற்கான தொகை ஒன்றினை செலுத்தியிருந்த போதும் அவ் கப் வண்டியின் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வீதவரி பில் போடப்பட்ட வருமானம் ரூபா 1,480,369 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 864,240 தொகை என கணக்கீடு

செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 619,129 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) வாடகையாளர்களை இனங்காணாத வர்த்தக நிலைய வாடகை ரூபா 6,349,592 இனை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பெறுமதி கூட்டியவரி ரூபா 4,319,539 தொகையினை மற்றும் முத்திரை வரி ரூபா 330,176 தொகையினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 85,774,941 இற்கான 05 சொத்து விடயங்களை, ரூபா 10,091,966 பெறுமதியான 03 பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19 (1)(i) இன் ஏற்பாடுகளின் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது தற்காலிகமாக பிரதியீட்டு மற்றும் சுயவிருப்பு அடிப்படையில் 10 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு மொத்த சம்பளம், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என ரூபா 541,943 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலுவை விஞ்சிய வருமானம் ரூபா 1,197,295 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவுகள் ரூபா 89,796 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 1,287,091 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீதவரி

-----------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 140(5) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 1997 ஆண்டின் பின்னர் வீதவரியினை திருத்தியமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 செலுத்துகை டவர்கள் மூலம் வருமானம்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது 6 செலுத்துகை டவர்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய வரி வருமானத்தை 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடை வாடகை

------------------------

1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் படி சபைக்கு சொந்தமான கடைகளின் வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானங்கள்

------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் 1968 இன் 14 இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அவ் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் நடாத்தப்படும் 01 சிற்றுண்டிச்சாலை மற்றும் 06 தங்குமிடங்களில் இருந்து குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய வருடத்திற்கான பெறுவனவுகளில் இருந்து நூற்றிற்கு ஒன்றினை விஞ்சாத கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

சபை நடைமுறையாண்டின் போது நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் ஆகியவற்றை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 நிலுவை வருமானம்

-------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 27,411,857 இற்கான நிலுவை வருமானத்தினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் படி அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.7 மிகை விதிப்புக்கள்

--------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 172(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 104,017 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

(அ) மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 413,036 இற்கான தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்த வேண்டிய விளக்குளின் வகை, எண்ணிக்கை பற்றிய விபரங்கள் என்பனவற்றை பதிவு செய்திருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்